1977 ஆகஸ்ட் 9] [திரு. கி. மனோகரன்]

இத் தீ விபத்தில் உயிர்ச் சேதமோ, காயமுற்றோரோ இல்லை. ஏற்பட்ட சொத்தின் இழப்பின் மதிப்பு சுமார் 1,88,050 ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. குடியிருப்புக் குடிசைகள் ஏதும் இல்லாததால் வீடு இழந்தமைக்காக அளிக்கப்படும், நிவாரண உதவி அளிக்கப்படவில்லை. இருப்பினும், தீக்கு இரையான குடிசைகளுக்குத் தலா ரூபாய் நூறு வீதமும், முற்றிலும் சேதமடைந்த கட்டு மரப் படகுகளுக்கு தலா ரூபாய் ஐந்நூறு கடனாகவும், ரூபாய் ஐந்நூறு மானியத் தொகையாகவும், ஓரளவு சேதமடைந்த பதினேழு கட்டு மரப் படகுகளுக்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் இருநூறு மானியத் தொகையாகவும், மற்ற ஓட்டர் போர்டுகளுக்கு (Otter boards) தலா இரண்டிற்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் 200 மானியத் தொகையாகவும், ஐந்து நைலான் வலைகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500 மானியமாகவும். பருத்தியால் ஆன ஒன்பது மீன்பிடிப்புவலைகளுக்கு ரூபாய் 200 கடனாகவும், ரூபாய் 200 மானியத் தொகையாகவும், ட்ராவல் (இழுப்பு வலை) வலைகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500மானியத் தொகையாகவும், ஓரளவு சேதமடைந்த இரண்டு விசைப் படகுகளுக்கு ரூபாய் 500 கடனாகவும், ரூபாய் 500 மானியத் தொகையாகவும், ஆக மொத்தம் ரூபாய் 44,100 கடன் தொகையாகவும், ரூபாய் 53,200 மானியத் தொகையாகவும் வழங்க மீன் துறை இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்து உள்ளார். அதனை அரசு பரிசீலித்து வருகிறது.

இவ் விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் மானியமாகவும், கடனாகவும், நிதி உதவி வழங்க அரசு வேண்டிய, உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஆதலால் இவ்விபத்து குறித்து மீண்டும் விவாதித்து பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

(ஆ) உளுந்தூர்பேட்டை அருகில், லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்ததும், பலர் படுகாயம் அடைந்ததும் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உளுந்தூர் பேட்டை அருகில் பதூரில் ஒரு பயங்கர லாரி விபத்தில் 12 பேர்கள் மரணமடைந்தது குறித்தும், மற்றும் பலர் படுகாயம் அடைந்தது

குறித்தும், அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திருவாளர்கள் எம். ஏ. லத்தீப், ஜே. ஜேம்ஸ், நா. சுந்தரராஜ், துரை முத்துச்சாமி, க. சுப்பு, வ. துலுக்காணம், சி. பழனிமுத்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசர, அவசிய, முக்கியத்துவம் என்ன என்பதை திரு. துலுக்காணம் அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்; அவர் அத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில்.

* திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, கடந்த ஆறும் தேதியன்று எங்கள் உளுந்தூர்பேட்டை தாலூக்காவில் பதூர் என்ற கிராமத்தின் அருகில் சேலம் மாவட்டத்திலிருந்து, வறுமையில் வாடிய மக்கள் மண்வெட்டும் தொழில் செய்வதற்காக சென்னைக்கு வந்து கொண்டிருந்தார்கள். பஸ்ஸில் சென்றால் அதிகம் செலவாகும் என்று கருதி லாரியில் வந்து அந்த விபத்தில் பலியானார்கள். இதுபோன்ற திடீர் விபத்துக்கள் முன்பு நடந்தபோது அன்றைக்கு முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், முதல்வர் நிதியிலிருந்து உடனடியாக நிவாரணம் அளித்து ஏழை எளிய மக்களின் துயரைத் துடைத்தார்கள். உதாரணமாக சினிமாத் தியேட்டர் ஒன்றில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிதி அளித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இந்த அரசானது வாடிவதங்கி வறுமையில் இருந்தவர்கள் உயிர்நீத்த பொழுது அந்தக் குடும்பத்தின் துயர் துடைப்பதற்காக முதல்வரவர்கள் நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது. விபத்திற்குள்ளான லாரியின் உரிமத்தைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும். விபத்தில் உயிர்நீத்த ஒவ்வொரு நபருக்கும் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி அளிக்க முன் வர வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, எம்.டி.யூ 9295 எண்ணுள்ள விஜய் மைன் என்ற பெயருடைய லாரி ஒன்று பாறுங்கற்களை ஏற்றிக் கொண்டு மேட்டூரிலிருந்து சென்னை செல்லும்போது 6-8-1977 அன்று காலை மணி சுமார் 3.00 அளவில் உளுந்துர்ப்பேட்டையை அடுத்துள்ள பதுர் அருகே விபத்துக்குள்ளாகியது. அந்த லாரியில் 28 கூலி ஆட்கள் ஆத்துரிலிருந்து சென்னைக்குப் பயணம் செய்தனர்: இவ்விபத்தில் 3 ஆண்களும் 3 பெண்களும் நான்கு குழந்தைகளும் தலத்திலேயே உயிரிழந்தனர். மற்றும் காயமுற்ற 7 பேர்களை உளுந்துர்ப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் மற்றும் 8 பேர்களை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் (கடலூர்) சிகிச்சைக்காக அனுமதிக்கப்

பட்டுள்ளது. நல்லான் என்ற 30 வயதுள்ள ஒருவரும், 2 வயதுள்ள லலிதா என்ற பெண் குழந்தையும் கடலூரில் உள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் உயிரிழந்தனர். அந்த மருத்துவ மனையிலுள்ள மீதி 6 பேர்களும் நலமுற்று வருகிறார்கள். அந்த லாரியில் பயணம் செய்த மற்ற 3 பேர்களும் காயமின்றி உயிர் தப்பினார்கள். உளுந்தூர்ப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 7 பேர்களில் நால்வர் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மற்ற மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஜோசப் என்ற லாரி ஓட்டுனர் கைது செய்யப்பட்டுள்ளார். லாரி சுத்தம் செய்பவர் தப்பி ஓடி விட்டார். இ.பி.கோ. 304ஏ, 337 மற்றும் 338 என்ற பிரிவுகளின் கீழ் குற்றம் எண் 269/77—ல் திருநாவலூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவ உதவி அதிகாரிகள் மூவரும், கடலூர் மாவட்ட தலைமை மருத்துவ மனையைச் சேர்ந்த மூன்று உதவி மருத்துவ அதிகாரிகளும் பிரேத பரிசோதனை செய்துள்ளனர்.

மேற்கூறிய விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருவதால் விசாரணைக்குப் பிறகு அரசு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்ற உறுதியின் பேரில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவுதர மறுக்கப்படுகிறது.

5. தகவல் கோரல்.

(அ) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அப்பொருள் குறித்துப் பேசுவது குறித்து:

திரு. க. சுப்பு: நான் பேசப் போவதில்லை. நான் கொடுத்திருக்கிறேன் என்பதால் ஒரேவொரு பாயிண்டை மட்டும் கிளாரிபை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் ஒப்புக்கொணடார்கள்.

திரு. க. சுப்பு: நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஒரு மெம்பர். . . . .